# திராவிட சினிமா

45

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.

## மாணவனும் ஆனந்தனும்: புறக்கணிப்பும் கவன ஈர்ப்பும்!

‘தமிழ்த் திரைப்படங்களில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைத் தடயங்கள்’ என்ற ரீதியிலான ஆய்வை மேற்கொள்வதென்பது கடுமையான சவாலுக்குரியது என ஏற்கெனவே பதிவு செய்திருந்தேன். முதல் காரணம் மிக மிக முக்கியமானது. 60களின் இறுதி மற்றும் 70களின் நடுப்பகுதி வரையான தமிழ்த் திரைப்படங்களில் முற்றாக இயல்பான ‘பொதுவெளி’ ஒன்றின் இருப்பைக் காண்பது அரிதிலும் அரிது. முதலில் இந்தப் பொதுவெளி என்ற பொருண்மையை விளக்கி விடுவது பயன்படும்.

திரைப்படங்கள் பெரும்பாலும் கட்டுப்படுத்தப்பட்ட களங்களில் மட்டுமே காட்சிப்படுத்தப்படுவது வாடிக்கை. இதிலொன்றும் பிழையில்லை. ஏனெனில், திரைக்காட்சிக்குத் தேவையானவை மட்டுமே இருப்பதுதான் காட்சியின் நோக்கத்தைத் தெளிவுறக் காட்டும். எனவே, மனிதர்களும் பொருட்களும் வெளிகளும் (சாலைகள், ரயில் மற்றும் பேருந்து நிலையங்கள், வீட்டுக்கு வெளியே காட்சிப்படும் தெருக்களில் நடமாடுவோர்) திட்டமிட்டே உருவாக்கப்படும்.

ஆட்சி ஒன்றின் சாதனைத் தடயங்களை, இயல்பாக காட்சிக்குள் கொண்டு வருவது இயக்குநரின் நோக்கமாக இல்லையெனில், சாதனைத் தடயங்களின் இருப்பு சாத்தியமில்லை. ஆனால், இயக்குநரின் கவனமான தவிர்ப்பையும் மீறி, அரசின் வெகுமக்கள் நலன் கருதிய திட்டங்கள் காட்சிப்பட்டுவிடும். அதாவது திராவிட மாடல் ஆட்சியின் பலதரப்பட்ட சாதனைச் செயல்பாடுகள் வெளியெங்கும் விரவி நிற்கும் போது, அதனைத் தவிர்த்து விட முடியாமல் போய்விடும்.

### புறக்கணிப்பை மீறித் தெரியும் சாதனை

இன்னொரு வகை திரைப்படங்களில், இவை எண்ணிக்கையில் மிகக் குறைவு என்றாலும், கவனமாக சாதனைகள் காட்சிப்படுத்தப்படும். 60களின் இறுதி தொடங்கி, ஒன்றிரண்டு பாடல் காட்சிகள் சென்னையின் மெரினா கடற்கரை, எழும்பூர் / சென்ட்ரல், அண்ணா சாலை போன்ற களங்களில் காட்சிப்படுத்தப்படுவது தொடங்கியது. அல்லது ஒன்றிரண்டு காட்சிகள் சென்னை நகரின் வீதிகளில் காட்சிப்படுத்தப்பட்டன. ஆனால், அவையும் கட்டுப்படுத்தப்பட்டே காட்சியாகின. படப்பிடிப்பை வேடிக்கை பார்ப்பார்கள் என்று கருதி, மக்கள் நடமாட்டமற்ற வெறிச்சோடிய தெருக்களில் மட்டுமே காட்சியாகின.





படங்கள் உதவி : ஞானம்

**குடியரசு தின ஊர்வல அரசு சாதனை விளக்க அலங்கார ஊர்தியொன்று, முன்களத்தில் இருக்க, அதைக் கடந்து நகரும் கேமரா, ஊர்தியில் உள்ள, ‘1972 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி செய்து தரப்படும் - தமிழ்நாடு மின்சார வாரியம்.’ என்ற வாசகத்தைப் போகிற போக்கில் காட்சிப்படுத்தியிருக்கும்.**

இந்த இரண்டு வகைமைக்குமான திரைப்படங்கள் என்று, 1970 ஆம் ஆண்டின் ‘மாணவன்’ மற்றும் ‘அனாதை ஆனந்தன்’ ஆகிய இரண்டு படங்களைச் சொல்லலாம். 1970-ஆம் ஆண்டில் வெளிவந்த ஏறத்தாழ 30 படங்களைப் பரிசீலித்ததில் இவைதான் தேறின. ஓர் ஆவலில் எம்.ஜி.ஆர் அவர்களின் ‘மாட்டுக்கார வேலன்’ (1969) மற்றும் ‘தேடிவந்த மாப்பிள்ளை’(1970) படங்களையும் பார்த்தேன். இந்தப் படங்களில், பார்ப்பன ‘சோ’ ராமசாமி மட்டும்தான் ‘தி.மு.க.வின் ஆட்சி / அரசியல்’ குறித்த கிண்டலைப் பேச அனுமதிக்கப்பட்டிருந்தார். எம்.ஜி.ஆரின் திரைப்படங்களில் நீக்கமற இடம் பிடிப்பார் ‘சோ’ ராமசாமி.

‘மாணவன்’ திரைப்படத்தின் பிரதான பகுதி 1965 முதல் 1970 ஆண்டுக்கு இடையே நிகழ்கிறது. ஒரு மில் முதலாளி / பண்ணையாரிடம் வேலை செய்து வந்த வேலைக்காரன் ஒருவன் பொறுப்பற்று சூதாடி, பொய்க் குற்றச்சாட்டில் சிறைக்குச் சென்றுவிட, அவனது மகன், தாயின் உழைப்பில் எம்.ஏ. வரை கல்வி கற்று, கல்லூரி ஆசிரியராகி ஒரு நீதிபதியின் மகளையே திருமணம் செய்யும் கதை. ஜெய்சங்கர், லட்சுமி நாயகன், நாயகி. முத்துராமன் வில்லன்.

ஜெய்சங்கரும் முத்துராமனும் ஒரே பள்ளியில் படித்துப் பிறகு ஒரே கல்லூரியிலும் படிக்கிறார்கள். உதவாக்கரை பணக்காரப் பிள்ளையான முத்துராமனுக்கு ஒரு வம்பர் கூட்டம். கல்லூரியில் நாயகன் கடுமையாக உழைத்துப் படிக்கிறான், இவனோ மாணவர் போராட்டம் என்ற பெயரில் ஆசிரியர்களையும், சக மாணவர்களையும் வம்பிழுப்பதே வேலையாக இருக்கிறான்.

1965 இல் நடந்த மாணவர் முன்னெடுத்த மொழிப் போர் முற்றிலுமாகப் பேசப்படவில்லை. மாறாக, மாணவர்கள் போராட்டம் கொச்சைப்படுத்தப்படுகிறது. திராவிடச் சாதனைத் தடயங்களை வசனங்களில் தேடினால், முதலில் காமராஜர் ஆட்சி சாதனை பேசப்படுகிறது. பண்ணையாரிடம் சவால் விடும் தாய் (சவுகார் ஜானகி) ‘எம் பிள்ளை படிக்கச் சோறு போட்டுப் பள்ளிக்கூடம் நடக்குது. உன் தயவு தேவையில்லை’ எனப் பேசுகிறாள். இந்தக் காட்சிகளின் காலம் ஐம்பதுகளின் இறுதியில். ஏனெனில் 1965 இல் கல்லூரி மாணவனாகி விடுகிறான் நாயகன்.

இப்படியான தேசியம் போற்றிய ‘மாணவனில்’ எப்படி ‘திராவிட மாடல்’ ஆட்சி சாதனைத் தடயம் தெரிய இயலும்? அதுதான் கவனமாகத் தவிர்த்தாலும், கவனத்தை மீறிப் பேசப்படும் வசனமும், காட்சி வெளியும். நாயகன் கல்லூரியில் படிக்க அவனை இழிவு செய்ய ‘சைக்கிள் ரிக்‌ஷா’ ஓட்டியதாக, வில்லன் சொல்ல, அதை உண்மைதான் என்கிறான் நாயகன். கலைஞரின் சாதனையான ‘கை ரிக்‌ஷா’ ஒழிப்பும் சைக்கிள் ரிக்‌ஷா வருகையும் இங்கே பதிவாகிறது.

இன்னொரு வெளிப்புறப் படப்பிடிப்புக் காட்சியில் காரில் செல்லும் நாயகி, சாலையில் செல்லும் நாயகன் மீது சேற்றைத் தெறிக்க வைத்து விடுகிறாள். நாயகன் அவளைத் தனது சகதியான சட்டையைத் துவைத்துத் தரச் சொல்ல, அழகாகச் சிமெண்ட் கற்களால் கரையமைக்கப்பட்ட கூவம் நதியில் ஓடும் நீரில் வெள்ளைச் சட்டையை அலசி, கரையிலுள்ள தளத்தில் துவைக்கிறாள். இதோ, கலைஞர் அவர்களின் கூவம் நதி சீரமைப்புப் பணி கண் முன்னே தெரிகிறது. இதுதானே கவனத்தை மீறி வெளிப்படும் சாட்சியம்.

### கவனம் ஈர்க்கும் சாதனைக் காட்சிகள்

அடுத்தப் படம் ஏ.வி.எம் / முத்துவேல் பிக்சர்ஸ் தயாரிப்பில் கிருஷ்ணன்-பஞ்சு இயக்கத்தில், ஏ.வி.எம்.ராஜன், ஜெயலலிதா நடித்தது. சூழலால் அனாதையாக்கப்பட்ட சிறுவன், சென்னைக்கு வந்து ஒரு களவுக் கூட்டத்தின் சிறுவர் அணியில் சேர்ந்து வாழ்ந்து இறுதியில், தனது உண்மையான தகப்பனுடன் இணையும் கதைக்களம்.

‘அனாதை ஆனந்தன்’ திரைப்படத்தில் ஒரு நடனக் காட்சி, அப்போதுதான் கட்டி முடிக்கப்பட்டுப் பயன்பாட்டுக்கு வந்திருந்த கடற்கரைச் சாலை, இறுதியில் ரிசர்வ் வங்கிக்கு எதிரான ‘சாதனை’ சுரங்கப் பாலத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். பாடல் / நடனக் காட்சியின் பெரும் பகுதி அந்தப் பாலத்திலேயே காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.

அதன் தொடர்ச்சியாகக் காட்சி நகர்ந்து தீவுத் திடலை அணுகும். தீவுத் திடலில் நிறுத்தப்பட்டிருக்கும் குடியரசு தின ஊர்வல அரசு சாதனை விளக்க அலங்கார ஊர்தியொன்று, முன்களத்தில் இருக்க, அதைக் கடந்து நகரும் கேமரா, ஊர்தியில் உள்ள ‘1972 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் அனைத்துக் கிராமங்களுக்கும் மின் வசதி செய்து தரப்படும் - தமிழ்நாடு மின்சார வாரியம்’ என்ற வாசகத்தைப் போகிற போக்கில் காட்சிப்படுத்தியிருக்கும். ஆனால், கவனத்தை ஈர்க்கும் அக்கறையோடு. இயக்குநர்கள் கிருஷ்ணன் - பஞ்சு ஆயிற்றே. நடனத்தின் அடுத்தப் பகுதியில் மெரினா கடற்கரை அருகில் கட்டி முடிக்கப்பட்டும், கட்டப்பட்டும் வரும் குடிசைமாற்று வாரிய கட்டடங்களைப் பின்புலமாகக் கொண்டிருக்கும்.

இந்த ரீதியிலான தடய சாட்சியங்களைக் கண்டடைவது மட்டும் ஆய்வை நிறைவு செய்யாது. ‘திராவிட மாடல்’ ஆட்சியால் விளைந்த சமூக மாற்ற விளைவுகளையும் திரைப்படங்களில் கண்டடைய முயற்சிக்கலாம்.

...படம் விரியும்

---

## ஸ்ரீபதியின் வெற்றி, சமூகநீதியின் வெற்றி

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையை அடுத்த புலியூர் கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீபதி, 23 வயதில் உரிமையியல் நீதிபதி தேர்வில் வெற்றி பெற்றுள்ளார். பழங்குடியினர் பிரிவில் முதல் பெண் உரிமையியல் நீதிபதி எனப் பெயர் எடுத்துள்ளவருக்குப் பின்னால் பெரும் போராட்டம் உள்ளது. ஜவ்வாது மலையில் பிறந்து, ஏலகிரி மலையில் கல்வி கற்று, சட்டப்படிப்பை முடித்து, படிப்பின் இடையில் மணமானாலும் இடைநின்று போகாமல் படித்து முடித்துள்ளார்.

குறிப்பாக, ஸ்ரீபதிக்குத் தேர்வு வரும் தேதியிலேயேதான் பிரசவத் தேதியும் கொடுக்கப்பட்டிருந்தது. தேர்வுக்கு இரண்டு நாட்களுக்கு முன் குழந்தையும் பிறந்துவிட்டது. தேர்வைக் கண்டிப்பாக எழுதவேண்டும் என்று தீவிரமாக இருந்தவர், மருத்துவரின் ஆலோசனையுடன் பல பாதுகாப்புகளுடன் வந்து தேர்வு எழுதி இருக்கிறார்.

ஸ்ரீபதியின் வெற்றிக்குப் பின்னால், அவரது தாய், கணவர், குடும்பத்தினர் எனப் பக்கபலமாக இருந்தாலும், நமது திராவிட மாடல் அரசு தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை எனக் கொண்டு வந்த அரசாணையின் வழியே ஸ்ரீபதி நீதிபதியாகத் தேர்வாகியுள்ளார்.

இந்த வெற்றியினைப் பாராட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், பெரிய வசதிகள் இல்லாத மலைக்கிராமத்தைச் சேர்ந்த பழங்குடியினப் பெண் ஒருவர் இளம் வயதில் இந்நிலையை எட்டியிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைவதாகக் குறிப்பிட்டுள்ளார். “சமூகநீதி என்ற சொல்லை உச்சரிக்கக் கூட மனமில்லாமல் தமிழ்நாட்டில் வளைய வரும் சிலருக்கு ஸ்ரீபதி போன்றோரின் வெற்றிதான் தமிழ்நாடு தரும் பதில்!” என முதலமைச்சர் கூறியுள்ள வரிகள், அரசியல் அர்த்தம் பொதிந்தவை. அந்த அரசியல், மேலும் பல வெற்றிகளைச் சாத்தியமாக்கும்.

---

## ஃப்ளாஷ்பேக்





சிவகுமார்

### செயல்வீரர்களும் தேர்தலும்!

1998-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலை முன்னிட்டு இளைஞர் அணி தம்பிமார்களைத் தேர்தலுக்குத் தயார்ப்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு முழுவதும் செயல்வீரர் கூட்டத்துடன் தேர்தல் பிரச்சாரமும் மேற்கொண்டார் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் தளபதி அவர்கள். அப்போது ஒருங்கிணைந்த கன்னியாகுமரி மாவட்ட ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்த நான், தளபதி அவர்களுக்கு சால்வை அணிவித்து மகிழ்ந்தேன்.

**-கே.சிவகுமார், மாநகரப் பிரதிநிதி, கன்னியாகுமரி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

---


## கருவூலம்

### தி.மு.க.வின் முதல் விருது!

**1956-ஆம் ஆண்டு தி.மு.க.வின் இரண்டாவது மாநில மாநாடு, திருச்சியில் நடைபெற்றது. தேவதாசி முறையை ஒழிக்க அரும்பாடுபட்ட திராவிட இயக்க வீராங்கனை மூவலூர் ராமாமிர்தம் அம்மையாருக்கு, அந்த மாநாட்டில் விருது வழங்கி, கவுரவித்தார் பேரறிஞர் அண்ணா. தி.மு.க.வின் முதல் விருதைப் பெற்றவர் என்ற பெருமையைப் பெற்றார் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 390




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131